# கோபிசெட்டிபாளையம் நகராட்சி
## 31.10.2023 ந் தேதி நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள் தீர்மான நகல்

1. இந்நகராட்சி ஆணையாளர் அவர்களின் செப்டம்பர் 2023–ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது (க.எண்.1464/2016/சி1)
   **அலுவலகக்குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம் .
   **பதிவு செய்யப்பட்டது.மன்றத்தீர்மானம் எண்.645**

2. இந்நகராட்சி பொறியாளர் அவர்களின் செப்டம்பர் 2023–ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது (க.எண்.1464/2016/சி1)
   **அலுவலகக்குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம்
   **பதிவு செய்யப்பட்டது.மன்றத்தீர்மானம் எண்.646**

3. இந்நகராட்சி துப்புரவு அலுவலர் அவர்களின் செப்டம்பர் 2023–ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது (க.எண்.1464/2016/சி1)
   **அலுவலகக்குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம் .
   **பதிவு செய்யப்பட்டது.மன்றத்தீர்மானம் எண்.647**

4. இந்நகராட்சி நகரமைப்பு ஆய்வாளர் மற்றும் நகரமைப்பு அலுவலர் (பொ) அவர்களின் செப்டம்பர் 2023–ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது (க.எண்.1464/2016/சி1)
   **அலுவலகக்குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம்
   **பதிவு செய்யப்பட்டது.மன்றத்தீர்மானம் எண்.648**

5. இந்நகராட்சி வருவாய் ஆய்வாளர்களின் செப்டம்பர் 2023–ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது (க.எண்.1464/2016/சி1)
   **அலுவலகக்குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம் .
   **பதிவு செய்யப்பட்டது.மன்றத்தீர்மானம் எண்.649**

.

6. இந்நகராட்சியில் மேற்கொள்ளப்பட்டு வரும் தூய்மை பாரத திட்டம், சுகாதாரம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணிகளை வீடியோ காட்சிகளாக எடுத்து எடிட்டிங் செய்து குரல் பதிவு (Voice Recording) மூலம் பணிகள், குறித்து விளக்கி பேசி வீடியோ தொகுப்பு தயார் செய்து வழங்க 28.08.2023 அன்று வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | விலை விகிதம் |
|---|---|---|
| 1. | அப்பு ஸ்டுடியோ & வீடியோ<br>61, S.D.N. காலனி,<br>பஸ் நிலையம் பின்புறம்,<br>கோபிசெட்டிபாளையம் – 638 452 | ரூ.19,780/– |
| 2. | சபரி டிஜிட்டல் ஸ்டுடியோ & வீடியோஸ்<br>47, சபரி டவர்ஸ்,<br>பாரியூர் மெயின் ரோடு,<br>கோபிசெட்டிபாளையம் – 638 476 | ரூ.19,560/– |
| 3. | G.A. பாபு<br>23, நகராட்சி வணிக வளாகம்,<br>பஸ் நிலையம் எதிரில்,<br>கோபிசெட்டிபாளையம் – 638 453 | ரூ.19,250/– |

மேற்கண்ட விபரப்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண் 3 ல் குறிப்பிட்டுள்ள M/s. G.A.பாபு 23, நகராட்சி வணிக வளாகம், பஸ் நிலையம் எதிரில், கோபிசெட்டிபாளையம் என்ற நிறுவனத்தின் விலை விகிதம் மற்ற இரண்டையும் விட குறைவாக உள்ளதால் அந்நிறுவனத்தின் விலைப்புள்ளி விலை விகிதத்தினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண். 1464/2023/எச்1)

**அலுவலகக்குறிப்பு:** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. இதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.650**

7. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான தினசரி சந்தை வணிக வளாகத்தில் புதியதாக கட்டப்பட்டு வரும் தினசரி சந்தை ஆண்டு குத்தகை இனம் மற்றும் தினசரி சந்தை வணிக வளாக கடைகளுக்கு 22.09.2023 ஆம் தேதியன்று முன் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. முன் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடை பெற்ற குத்தகை இனங்கள் :

1. தினசரி சந்தை ஆண்டு குத்தகை இனம்
2. தினசரி சந்தை IUDM கடை எண். A.01 ( மாற்றுத்திறனாளிகளுக்கு ஒதுக்கப்பட்டது)
3. தினசரி சந்தை IUDM கடை எண். A.02 முதல் கடை எண். A.26 வரை (25 கடைகள்)
4. தினசரி சந்தை IUDM கடை எண். G.1 மற்றும் கடை எண்.G.2 ( 2 கடைகள்)

<u>1) தினசரி சந்தை ஆண்டு குத்தகை இனம் :</u>

மேற்கண்டவாறு நடைபெற்ற முன்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் தினசரி சந்தை ஆண்டு குத்தகை இனத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கோர யாரும் முன்வரவில்லை. பின்வரும் விபரப்படி இரண்டு நபர்கள் மட்டும் ஏலத்தில் கலந்து கொண்டனர்.

| வ.எண் | ஏலத்தில் கலந்து கொண்டவர்கள் விபரம் | ஏலத் தொகை |
|---|---|---|
| 1 | தலைவர், கோபி அறிஞர் அண்ணா வியாபாரிகள் சங்கம்,<br>திரு.வி.சிவன் த/பெ. வெங்கிடு<br>11/25. புகழேந்தி வீதி, கோபி<br>94429 84184 | **ரூ.47,01,500/-** |
| 2 | திரு.எஸ்.முத்துசாமி<br>த/பெ. சண்முகம்<br>41/ஏ. கொங்கு நகர்,<br>நல்லகவுண்டம்பாளையம்,<br>கோபிசெட்டிபாளையம்<br>94439 25948 | ரூ.47,01,000/- |

மேற்கண்ட விபரப்படி தினசரி சந்தை ஆண்டு குத்தகை இனத்திற்கு, ஓராண்டிற்குரிய ஆண்டு குத்தகை உரிமத்தொகையாக திரு.எஸ்.முத்துசாமி என்பவர் கோரியுள்ள ஏலத்தொகை ரூ.47,01,000/- ஐ விட கூடுதலாக ரூ.500/- சேர்த்து, கோபி அறிஞர் அண்ணா வியாபாரிகள் சங்கத்தினர் ரூ.47,01,500/-க்கு (ரூபாய் நாற்பத்தி ஏழு இலட்சத்து ஆயிரத்து ஐந்நூறு) உயர்ந்தபட்ச ஏலத் தொகை கோரியுள்ளனர்.

<u>2) தினசரி சந்தை வணிக வளாக IUDM கடைகள் :</u>

தினசரி சந்தை வணிக வளாகத்தில் புதியதாக கட்டப்பட்டு வரும் 28 கடைகளில், நான்கு கடைகளுக்கு தலா இரண்டு நபர்கள் ஏலத்தில் கலந்து கொண்டனர். நான்கு கடைகளுக்கு தலா ஒரு நபர் மட்டுமே ஏலத்தில் கலந்து கொள்ள விண்ணப்பம் அளித்துள்ளனர். ஒரு கடைக்கு ஒரே ஒரு நபர் மட்டுமே ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். விபரம் பின்வருமாறு.

| வ.எண் | கடையின் விபரம் | ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர் விபரம் | ஏலத்தொகை | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|---|---|
| 1 | தினசரி சந்தை IUDM கடை எண். A.01 (மாற்றுத்திறனாளிக்கு ஒதுக்கப்பட்ட கடை) | திரு.ஆர்.சதீஷ் த/பெ. ராஜசேகரன், 36/80, சின்னசாமி வீதி, N.R.P நகர், கோபி 99766 55363 | **ரூ.15,100/-** | இல்லை |
| | | திரு.ஈ.பிரபாகரன் த/பெ. இளங்கோவன், 3/18, மேற்கு கரடு, வேட்டைகாரன் கோயில், கோபி – 638 476 95005 82702 | ஏலம் கோர வில்லை | இல்லை |
| 2 | தினசரி சந்தை IUDM கடை எண். A.07 | திரு.வி.எஸ்.முருகையன் த/பெ. சுப்பரமணியம், வடுகபாளையம், மொடச்சூர். கோபிசெட்டிபாளையம் 93677 44888 | ஒரு நபர் மட்டுமே கலந்து கொண்டதால் ஏலம் கோரவில்லை | இல்லை |
| 3 | தினசரி சந்தை IUDM கடை எண். A.13 | திருமதி.ஆர்.விஜயலட்சுமி க/பெ. ரமேஷ்குமார், 99, யாகூப் வீதி, கோபிசெட்டிபாளையம். 93635 00466 | ஒரு நபர் மட்டுமே கலந்து கொண்டதால் ஏலம் கோரவில்லை | இல்லை |
| 4 | தினசரி சந்தை IUDM கடை எண். A.14 | திரு.ஏ.திருவேங்கடம் த/பெ. அம்மாசையப்பன், 174ஏ. பச்சைமலை ரோடு, கோபிசெட்டிபாளையம் 94421 00034 | ரூ.15,100/- | இல்லை |
| | | திரு.ஆர்.பிரபு த/பெ. ரமேஷ்குமார். 141, ஆசிரியர் நகர், குள்ளம்பாளையம், கோபிசெட்டிபாளையம் 63745 43796 | **ரூ.15,300/-** | இல்லை |
| 5 | தினசரி சந்தை IUDM கடை எண். A.15 | திரு.ஜி.வி.அதியமான் த/பெ. வெங்கிடு, 37, குமணன் வீதி, கோபிசெட்டிபாளையம் 99427 33355 | **ரூ.15,200/-** | இல்லை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | திரு.வெ.குமாரராஜா<br>த/பெ. வெங்கிடு,<br>18/256, காமராஜ் நகர்,<br>சேவூர் ரோடு, அவினாசி<br>98422 79781 | ரூ.15,100/– | இல்லை |
| 6 | தினசரி சந்தை IUDM கடை எண். A.19 | திருமதி.ராஜேஸ்வரி<br>க/பெ. கருணாநிதி,<br>11, குமணன் வீதி, கோபி<br>97155 59140 | ஒரு நபர் மட்டுமே கலந்து கொண்டதால் ஏலம் கோரவில்லை | இல்லை |
| 7 | தினசரி சந்தை IUDM கடை எண். A.21 | திரு.அ.சண்முகசுந்தரம்,<br>த/பெ. அங்கப்பன்,<br>2ஏ, வாய்க்கால் வீதி சந்து,<br>கோபிசெட்டிபாளையம் | ஒரு நபர் மட்டுமே கலந்து கொண்டதால் ஏலம் கோரவில்லை | ரூ.15,100/– |
| 8 | தினசரி சந்தை IUDM கடை எண். A.26 | திரு.ஏ.மயில்வாகனன்,<br>த/பெ. அரசப்ப நாடார்,<br>54, காளியண்ணன் Extn – 3,<br>வாய்க்கால் ரோடு, கோபி<br>94456 32199 | **ரூ.15,200/–** | இல்லை |
| | | திரு.எம்.ஏ.பழனிசாமி,<br>த/பெ. ஆறுமுககவுண்டர்,<br>18, திரு.வி.க.வீதி,<br>கோபிசெட்டிபாளையம் | ரூ.15,100/– | இல்லை |

மேற்கண்ட விபரங்களின் படி,

வரிசை எண். 1 ல் கண்டுள்ள தினசரி சந்தை IUDM கடை எண். A.01 க்கு திரு.ஆர்.சதீஷ் என்பவர் ரூ.15,100/– உயர்ந்தபட்ச ஏலத்தொகை கோரியுள்ளார்.

வரிசை எண். 4 ல் கண்டுள்ள தினசரி சந்தை IUDM கடை எண். A.14 க்கு திரு. ஏ.திருவேங்கடம் என்பவர் கோரியுள்ள ஏலத்தொகை ரூ.15,100/– ஐ விட கூடுதலாக ரூ.200/– சேர்த்து திரு.ஆர்.பிரபு என்பவர் ரூ.15,300/–க்கு உயர்ந்தபட்ச ஏலத்தொகை கோரியுள்ளார்.

வரிசை எண். 5 ல் கண்டுள்ள தினசரி சந்தை IUDM கடை எண். A.15 க்கு திரு. வெ.குமாரராஜா என்பவர் கோரியுள்ள ஏலத்தொகை ரூ.15,100/– ஐ விட கூடுதலாக ரூ.100/– சேர்த்து திரு.ஜி.வி.அதியமான் என்பவர் ரூ.15,200/– க்கு உயர்ந்தபட்ச ஏலத்தொகை கோரியுள்ளார்.

வரிசை எண். 8 ல் கண்டுள்ள தினசரி சந்தை IUDM கடை எண். A.26 க்கு திரு. எம்.ஏ.பழனிசாமி என்பவர் கோரியுள்ள ஏலத்தொகை ரூ.15,100/– ஐ விட கூடுதலாக ரூ.100/– சேர்த்து திரு.ஏ.மயில்வாகனன் என்பவர் ரூ.15,200/– க்கு உயர்ந்தபட்ச ஏலத்தொகை கோரியுள்ளார்.

வரிசை எண். 2, 3, 6 மற்றும் 7 ல் உள்ள கடை எண்கள் A.07, A.13, A.19 மற்றும் A.21 ஆகிய கடைகளுக்கு தலா ஒரே ஒரு நபர் மட்டுமே ஏலத்தில் கலந்து கொள்ள விண்ணப்பம் அளித்துள்ளதால், மேற்படி கடைகளுக்கு தேதி குறிப்பிடப்படாமல் ஏலம் ஒத்தி வைக்கப்பட்டது.

வருவாய் ஆய்வர் அவர்கள் தனது 25.09.2023 ஆம் தேதிய குறிப்பில், தினசரி சந்தை ஆண்டு குத்தகை இனம் , தினசரி சந்தை IUDM கடை எண்கள். A.01, A.14, A.15 மற்றும் A.26 ஆகிய நான்கு கடைகளுக்கு உயர்ந்தபட்ச ஏலத் தொகை கோரியுள்ள நபர்களுக்கு மன்றத்தின் அனுமதி பெற்று, கட்டுமான பணிகள் முடிவடைந்தபின் ஒப்படைக்கும் நாள் முதல் மூன்று ஆண்டுகளுக்கு குத்தகை உரிமம் வழங்கலாம் எனத்தெரிவித்துள்ளார்.

எனவே வருவாய் ஆய்வர் அவர்கள் குறிப்பின்படி

1. தினசரி சந்தை ஆண்டு குத்தகை இனத்திற்கு உயர்ந்தபட்ச ஏலத்தொகை ரூ.47,01,500/– கோரியுள்ள கோபி அறிஞர் அண்ணா வியாபாரிகள் சங்கம் அவர்களுக்கும்,
2. தினசரி சந்தை IUDM கடை எண். A.01 க்கு உயர்ந்தபட்ச ஏலத்தொகை ரூ.15,100/– கோரியுள்ள திரு.ஆர்.சதீஷ் என்பவருக்கும்,
3. தினசரி சந்தை IUDM கடை எண். A.14 க்கு உயர்ந்தபட்ச ஏலத்தொகை ரூ.15,300/– கோரியுள்ள திரு.ஆர்.பிரபு என்பவருக்கும்,
4. தினசரி சந்தை IUDM கடை எண். A.15 க்கு உயர்ந்தபட்ச ஏலத்தொகை ரூ.15,200/– கோரியுள்ள திரு.ஜி.வி.அதியமான் என்பவருக்கும்,
5. தினசரி சந்தை IUDM கடை எண். A.26 க்கு உயர்ந்தபட்ச ஏலத்தொகை ரூ.15,200/– கோரியுள்ள திரு.ஏ.மயில்வாகனன் என்பவருக்கும்

புதியதாக கட்டப்பட்டு வரும் தினசரி வணிக வளாக கட்டுமான பணிகள் முடிவடைந்தபின், ஒப்படைக்கும் நாள் முதல் மூன்று ஆண்டுகளுக்கு குத்தகை உரிமம் வழங்கவும், ஏலம் போகாத மீதமுள்ள 24 கடைகளுக்கு மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 1272/2023/அ3)

**அலுவலகக்குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.
**அனுமதிக்கப்பட்டது.மன்றத்தீர்மான எண்.651**

8. இந்நகராட்சி பொறியியல் பிரிவில் குடிநீர் விநியோகம் செய்ய பயன்படுத்தப்பட்டு வரும் குடிநீர் டேங்கர் லாரி (வண்டி எண்.TN 36D 2709) கொள்முதல் செய்து 22 வருடங்கள் ஆகி விட்டது. மேலும் அதன் தகுதி சான்று காலம் முடிந்து விட்டது. இந்நிலையில் குடிநீர் லாரி பழுது ஏற்பட்டு இயக்க முடியாத நிலையில் உள்ளதாக ஓட்டுநர் தெரிவித்துள்ளார். மேலும் 15 ஆண்டுகள் மேற்பட்ட வாகனங்கள் இயக்க அரசால் தடை விதிக்கப்பட்டுள்ளது, ஆனால் இந்நகராட்சியில் உரக்கிடங்கு , ராமர் எக்ஸ்டன்சன் Insulator மற்றும் ஒரு சில பகுதிகளுக்கு தினசரி குடிநீர் வழங்குவது அவசியமாகும் . தற்பொழுது இந்நகராட்சியில் ஒரு குடிநீர் டேங்கர் லாரி வாங்க 15 வது நிதிக்குழு திட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டு 05.10.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளது.

இந்நிலையில் இப்பணி முடித்து புதிய குடிநீர் டேங்கர் லாரி கொள்முதல் செய்ய சுமார் 3 மாதங்கள் ஆகும். அதுவரை குடிநீர் தங்கு தடையின்றி வழங்குவது அவசியமாகும். எனவே புதிய குடிநீர் லாரி கொள்முதல் செய்யும் வரை தற்காலிகமாக வாடகை அடிப்படையில் குடிநீர் டேங்கர் லாரி ஒப்பந்த அடிப்படையில் வழங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.1.50 இலட்சம் ஆகும். மேற்கண்ட பணியினை நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .

**அலுவலகக்குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம் .
2. மேற்காண் செலவிலனத்தை நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கோள்ள மன்றம் அனுமதிக்கலாம்
3. குடிநீர் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் ஏற்கலாம் .

**அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. 3 ஏற்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.652**

9. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் பவானி ஆற்றிலிருந்து குடிநீர் எடுக்கப்பட்டு நகர் முழுவதும் பத்து மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் மூலம் தினசரி குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இதில் சுமார் 100 எண்ணிக்கை வால்வுகள் உள்ளது. இதன் மூலம் ஒவ்வொரு பகுதிக்கும் உரிய நேரத்தில் வால்வுகள் திறந்து முறையாக குடிநீர் வழங்க வேண்டியது அவசியமாகும். மேலும் இந்நகராட்சியின் தற்போதைய மக்கள் தொகை .66,000 ஆகும், மொத்தம் 18135 குடியிருப்புகள் உள்ளது. இவற்றில் 13100 வீட்டு குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டு தினசரி குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

எனவே இந்நகராட்சியில் மேற்கண்ட விபரப்படி தடையின்றி தினசரி குடிநீர் வழங்க அரசு விதிகளின் படி 31 பணியாளர்கள் தேவைப்படுகிறது.தற்பொழுது 3 பணியாளர்கள் மட்டுமே உள்ளனர் .எனவே குடிநீர் பணி தடையின்றி செய்ய தற்காலிகமாக 12 எண்ணிக்கை கொண்ட குடிநீர் விநியோக பணியாளர்கள் தினக்கூலி அடிப்படையில் வெளிக்கொணர்வு (Outsourcing) மூலம் ஆட்கள் எடுத்து பணி செய்யவும் அதற்கான ஓராண்டு உத்தேச செலவினம். ரூ.35.00 இலட்சம் செலவினத்தில் (ஆண்டு ஒன்றிற்கு) குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம் .
2. மேற்காண் செலவிலனத்தை நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம் .
3. பணியின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் ஏற்கலாம் .

**அலுவலக குறிப்பு 1 அனுமதிக்கட்டது. 2. அனுமதிக்கப்பட்டது. 3. ஏற்றுக்கொள்ளப்பட்டது. மன்றத்தீர்மான எண்.653**

10. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட பேருந்து நிலையத்தில் உள்ள High Mast Light 2 எண்ணிக்கை உள்ளது. அது மிக உயரமாக உள்ளதால் பராமரிக்கும் பணி செய்ய மிக சிரமமாக உள்ளது அந்த மின் விளக்கின் உயரத்தை குறைக்க வேண்டியுள்ளதால் அதற்கு தேவையான Clamp மற்றும் அப்பணியை மேற்கொள்ள Crain தேவைப்படுவதால் அதற்கான வாடகை தொகை ரூ.7000/- மற்றும் கிளாம் செய்ய ஆகும் செலவினம் ரூ.3000/- ஆக மொத்தம் ரூ.10,000 ஐ நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.**2338/2023/**இ1)

**அலுவலகக்குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம் .
2. மேற்காண் செலவின தொகையை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளலாம் .
3. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.654**

11. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் காந்தி ஜெயந்தியை முன்னிட்டு அலுவலக வளாகத்தில் உள்ள காந்தி சிலைக்கு அலங்கார மின் விளக்குகள் அமைக்கப்பட்டது. அதற்கான செலவின தொகை.ரூ.2500/- அகும். மேற்படி செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.**2337/2023/**இ1)

**அலுவலகக்குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம் .
2. மேற்காண் செலவின தொகையை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளலாம் .

**அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.655**

12. நகரில் டெங்கு காய்ச்சல் கட்டுப்படுத்தும் பணிக்கு பயன்படுத்தப்படும் நிலவேம்பு சூரணம் வாங்கிக்கொள்ள ஏற்கனவே இந்நகர்மன்ற தீர்மான எண். 562 நாள். 25.07.2023 ல் ஒப்புதல்

வழங்கியுள்ளதின் பேரில் அரசு கூட்டுறவு நிறுவனமான M/s. Tamil Nadu Multipurpose Indco Service, Thiruchirappali – 620008 அவர்களிடம் அந்நிறுவனத்தினரிடம் ரூ. 1250 + 12 % GST (per kg) என்னும் விலை விகிதத்தில் நிலவேம்பு பவுடர் கொள்முதல் செய்து டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிகளுக்கு பயன்படுத்தி கொள்ள மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 1708/2023/எச் 1)

**அலுவலக குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. நோய் தடுப்பு பணிகள் அவசர அவசியம் கருதி அரசு கூட்டுறவு நிறுவனமான M/s. Tamil Nadu Multipurpose Indco Service, Thiruchirappali – 620008 அவர்களுக்கு பணி உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு 1 அனுமதிக்கப்பட்டது. 2 ஏற்றுக்கொள்ளப்பட்டது. மன்றத்தீர்மான எண்.656**

13. கோபிசெட்டிபாளையம் நகராட்சி பகுதிகளில் செயல்பட்டு வரும் நகராட்சியின் பராமரிப்பில் உள்ள 9 பள்ளிகளின் கழிப்பறைகளின் பராமரிப்பு மற்றும் பள்ளி வளாக தூய்மை பணிகளை மேற்கொள்ள தினமும் 19 தூய்மை பணியாளர்களை (ஒரு மேற்பார்வையாளர் உட்பட) வெளிப்பணி ஒப்படைப்பு (Outsourcing Basis) முறையில் விநியோகம் செய்யும் பணிக்கு 26.09.2023 ஆம் தேதி அன்று ஒப்பந்தபுள்ளிகள் பெறப்பபட்டது. வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளின் விபரம் பின்வருமாறு.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கான ஒப்பந்தபுள்ளி விலைவிகிதம் தொகை ரூபாயில் |
|---|---|---|
| 1. | RELYON FACILITY SERVICES PRIVATE LIMITED<br>Plot No : 142, 5th Cross Street,<br>Sri Sainagar,<br>Okkiam Thoraipakkam,<br>Chennai – 600 097 | ரூ.633/– |
| 2. | TRUSTUS OUT SOURCING SOLUTIONS PRIVATE LIMITED<br>Plot No : 117, 28 th Street,<br>Balaji Nagar,<br>Chennai – 600 097 | ரூ.631/– |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.2 இல் குறிப்பிட்டுள்ள M/s. TRUSTUS OUT SOURCING SOLUTIONS PRIVATE LIMITED Plot No : 117, 28 th Street, Balaji Nagar, Chennai – 600 097 அவர்களின் ஒப்பந்தபுள்ளி விலைவிகதமானது மற்றொன்றைவிட குறைவாக உள்ளதால் அந்நிறுவனத்தாரரின் ஒப்பந்தபுள்ளியினை மன்றம் ஏற்கலாம். குறைவான ஒப்பந்தபுள்ளி விலைவிகிதம் வழங்கிய நிறுவனமான மேற்குறிப்பிட்ட நிறுவனத்திடமிருந்து 01.11.2023 முதல் பணியாளர்களை பெற்று 80 பள்ளி வேலை நாட்களுக்கு பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண். 1830/2023/எச்1)

**அலுவலகக்குறிப்பு:** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.657**

14. இந்நகராட்சியில் அனைத்து வார்டுகளிலும் உள்ள கழிவு நீர் கால்வாயில் உற்பத்தியாகும் கொசுப்புழுக்களை கட்டுப்படுத்தும் மருந்தான (Bacillus Thuringiensis Varisrealensis 12 Aqueous – Suspansion–12 AS) மருந்து 50 லிட்டர் அரசு கூட்டுறவு நிறுவனமான Tamil Nadu Multipurpose Indco Service, Thiruchirappali அவர்களிடம் லிட்டர் ஒன்றுக்கு ரூ. 1475 + GST 12 % என்னும் விலை

விகிதத்தில் கொள்முதல் செய்து கொசுக்களை அழிக்கும் பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 1708/2023/எச் 1)

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.
**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.658**

15. கோபிசெட்டிபாளையம் நகராட்சி பகுதியில் உள்ள 30 வார்டுகளிலும் கொசு ஒழிப்பு பணிகளை மேற்கொள்ள தினமும் 37 கொசுபுழு ஒழிப்பு பணியாளர்களை வெளிப்பணி ஒப்படைப்பு (Outsourcing Basis) முறையில் விநியோகம் செய்யும் பணிக்கு 26.09.2023 ஆம் தேதி அன்று ஒப்பந்தபுள்ளிகள் பெறப்பபட்டது. வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளின் விபரம் பின்வருமாறு.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கான ஒப்பந்தபுள்ளி விலைவிகிதம் தொகை ரூபாயில் |
|---|---|---|
| 1. | RELYON FACILITY SERVICES PRIVATE LIMITED<br>Plot No : 142, 5th Cross Street,<br>Sri Sainagar,<br>Okkiam Thoraipakkam,<br>Chennai – 600 097 | ரூ.572/– |
| 2. | TRUSTUS OUT SOURCING SOLUTIONS PRIVATE LIMITED<br>Plot No : 117, 28 th Street,<br>Balaji Nagar,<br>Chennai – 600 097 | ரூ.570/– |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.2 இல் குறிப்பிட்டுள்ள M/s. TRUSTUS OUT SOURCING SOLUTIONS PRIVATE LIMITED Plot No : 117, 28 th Street, Balaji Nagar, Chennai – 600 097 அவர்களின் ஒப்பந்தபுள்ளி விலைவிகதமானது மற்றொன்றைவிட குறைவாக உள்ளதால் அந்நிறுவனத்தாரரின் ஒப்பந்தபுள்ளியினை மன்றம் ஏற்கலாம். குறைவான ஒப்பந்தபுள்ளி விலைவிகிதம் வழங்கிய நிறுவனமான மேற்குறிப்பிட்ட நிறுவனத்திடமிருந்து 01.11.2023 முதல் கொசு ஒழிப்பு பணியாளர்களை பெற்று பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண். 1829/2023/எச்1)
**அலுவலகக்குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.
**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.659**

16. இந்நகராட்சியின் மூலம் நகரில் தினமும் சேகரிக்கப்படும் கழிவுகளில் மறுசுழற்சிக்கு உதவாத பிளாஸ்டிக் கழிவுகள் பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை விதிகளின் படி சிமெண்ட் ஆலைகளுக்கு அனுப்பப்பட்டு மாற்று எரிபொருள் பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்படுகிறது. இப்பணிக்கு வாடகைக்கு அமர்த்தும் முறையில் லாரிகளை விநியோகம் செய்யும் ஒப்பந்ததாரரான M/S. Explosive Enterprises. Gobichettipalayam அவர்களிடம் லாரிகளை பெற்று ரூ. 1680 + 18% GST (டன் ஒன்றுக்கு) என்னும் ஒப்பந்த விலை விகிதத்தில் இப்பணிக்கு ஏற்கனவே ரூ.3.75 இலட்சத்திற்கு மன்ற அனுமதி பெற்று பிளாஸ்டிக் கழிவகள் அனுப்பப்பட்டு வருகிறது. இந்நிலையில் நாளது தேதி வரை இதற்கு ரூ.3,51,410 /– தொகை செலவிடப்பட்டுள்ளது.

பொதுசுகாதாரபணியின் அவசியம் கருதி எதிர் வரும் 30.11.2023 வரை கூடுதலாக இப்பணிக்கு ரூ.1.25 இலட்சம் ஆகும் என மதிப்பிடப்படுவதால் இப்பணிக்கு ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட தொகையுடன் கூடுதலாக ரூ.1.25 இலட்சத்திற்கும் 27.09.2023 மற்றும் 05.10.2023 ஆகிய இரு

தேதிகளில் கழிவுகள் அனுப்பி வைத்ததையும், ஏற்கனவே லாரிகளை விநியோகிக்கும் நிறுவனத்திடம் அதே ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதத்தில் இப்பணியினை தொடர்ந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.1152/2023/H1)

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்

**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.660**

17. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான தினசரி சந்தை வணிக வளாகத்தில் புதியதாக கட்டப்பட்டு வரும் தினசரி சந்தை வணிக வளாக IUDM கடைகளுக்கு 13.10.2023 ஆம் தேதியன்று இரண்டாவது முறையாக முன் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. முன் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடை பெற்ற குத்தகை இனங்கள் :

1. தினசரி சந்தை IUDM கடை எண். A.02 முதல் கடை எண். A.13 வரை (12 கடைகள்)
2. தினசரி சந்தை IUDM கடை எண். A.16 முதல் கடை எண். A.25 வரை (10 கடைகள்)
3. தினசரி சந்தை IUDM கடை எண். G.1 மற்றும் கடை எண்.G.2 ( 2 கடைகள்)

மேற்படி 24 கடைகளில், எட்டு கடைகளுக்கு தலா இரண்டு நபர்கள் ஏலத்தில் கலந்து கொண்டனர். மேற்படி கடைகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோர யாரும் முன்வரவில்லை. விபரம் பின்வருமாறு.

| வ.எண் | கடையின் விபரம் | ஏலத்தில் கலந்து கொண்டவர் விபரம் | ஏலத்தொகை |
|---|---|---|---|
| 1 | தினசரி சந்தை IUDM கடை எண். **A.07** | திரு.வி.எஸ்.முருகையன்<br>த/பெ. சுப்பிரமணி,<br>165, பள்ளிகூடவீதி, வடுகபாளையம்,<br>மொடச்சூர், கோபி<br>93677 44888 | ரூ.15,100/- |
| | | திரு.வி.எஸ்.தேவராஜ்<br>த/பெ. சுப்பிரமணி<br>165, மாரியம்மன் கோயில் வீதி,<br>வடுகபாளைம், மொடச்சூர், கோபி<br>93673 96666 | **ரூ.15,200/-** |
| 2 | தினசரி சந்தை IUDM கடை எண். **A.09** | திரு.த.சதீஷ்குமார் த/பெ. தனப்பால்,<br>4/41, டேங்க் வீதி,<br>கொண்டையம்பாளையம்,<br>ஈரோடு – 638 505<br>99428 40000 | **ரூ.15,200/-** |
| | | திரு.எம்.மணிகண்டன்<br>த/பெ. முருகேசன்,<br>48/93, அங்குவிலாஸ் வீதி,<br>கோபி – 638 452<br>96773 66750 | ரூ.15,100/- |
| 3 | தினசரி சந்தை IUDM கடை எண். **A.10** | திரு.எம்.வடிவேல்<br>த/பெ. முருகையன்,<br>171ஏ, கச்சேரி வீதி, கோபி – 638 452<br>99940 33915 | ரூ.15,100/- |
| | | திரு.எஸ்.கார்த்திக்<br>த/பெ. செல்வராஜ்<br>49/28, காட்டுவலவு வீதி,<br>மொடச்சூர், கோபி – 638 452<br>94421 70777 | **ரூ.15,200/-** |

| | | | |
|---|---|---|---|
| 4 | தினசரி சந்தை IUDM கடை எண். **A.13** | திருமதி.ஆர்.விஜயலட்சுமி<br>க/பெ. ரமேஷ்குமார்,<br>99பி. யாகூப் வீதி,<br>கோபிசெட்டிபாளையம் – 638 452<br>93635 00466 | **ரூ.15,200/-** |
| | | திரு.என்.ரமேஷ்குமார்<br>த/பெ. நாகலிங்கம்,<br>141, ஆசிரியர் நகர்,<br>குள்ளம்பாளையம்,<br>கோபிசெட்டிபாளையம் – 638 476<br>98427 80667 | ரூ.15,100/- |
| 5 | தினசரி சந்தை IUDM கடை எண். **A.16** | திரு.ஜி.வி.அதியமான்,<br>த/பெ. வெங்கிடு,<br>37, குமணன் வீதி,<br>கோபிசெட்டிபாளையம் – 638 476<br>99427 33355 | ரூ.15,100/- |
| | | திரு.வெ.குமாரராஜா<br>த/பெ. வெங்கிடு,<br>256, காமராஜ் நகர்,<br>அவினாசி – 641 654<br>77087 78877 | **ரூ.15,200/-** |
| 6 | தினசரி சந்தை IUDM கடை எண். **A.18** | செல்வி.ராஜேஸ்வரி<br>த/பெ. கருணாநிதி,<br>11, குமணன் விதி,<br>கோபிசெட்டிபாளையம்,<br>97155 59140 | **ரூ.15,200/-** |
| | | திரு.வி.ஸ்ரீதர்<br>த/பெ. வடிவேல்,<br>39/31, சௌந்தரபாண்டியன் வீதி,<br>கோபிசெட்டிபாளையம்<br>94451 41074 | ரூ.15,100/- |
| 7 | தினசரி சந்தை IUDM கடை எண். **A.22** | திரு.ஜி.என்.சரவணக்குமார்<br>த/பெ. நடராஜ்,<br>18, வாய்க்கால் வீதி,<br>கோபிசெட்டிபாளையம்<br>94439 26367 | ஏலத்தில் கலந்து கொள்ளவில்லை |
| | | திரு.அ.சண்முகசுந்தரம்<br>த/பெ. அங்கப்பன்,<br>2ஏ, வாய்க்கால் வீதி சந்து,<br>கோபிசெட்டிபாளையம்<br>95786 26666 | **ரூ.15,200/-** |
| | | திரு.வி.கவியரசன்<br>த/பெ. வெங்கிடுசாமி,<br>26/92, புகழேந்தி வீதி,<br>கோபிசெட்டிபாளையம்<br>99440 14715 | ரூ.15,100/ |

| | | | |
|---|---|---|---|
| 8 | தினசரி சந்தை IUDM கடை எண். **A.23** | திரு.ஜி.என்.சரவணக்குமார்<br>த/பெ. நடராஜ்,<br>18, வாய்க்கால் வீதி,<br>கோபிசெட்டிபாளையம்.<br>94439 26367 | ஏலத்தில் கலந்து கொள்ளவில்லை |
| | | திரு.அ.சண்முகசுந்தரம்<br>த/பெ. அங்கப்பன்,<br>2ஏ, வாய்க்கால் வீதி சந்து,<br>கோபிசெட்டிபாளையம்<br>95786 26666 | **ரூ.15,200/-** |
| | | திரு.வி.கவியரசன்<br>த/பெ. வெங்கிடுசாமி,<br>26/92, புகழேந்தி வீதி,<br>கோபிசெட்டிபாளையம்<br>99440 14715 | ரூ.15,100/ |

மேற்கண்ட விபரங்களின் படி,

வரிசை எண். 1 ல் கண்டுள்ள தினசரி சந்தை IUDM கடை எண். A.07 க்கு திரு.வி.எஸ்.முருகையன் என்பவர் கோரியுள்ள ஏலத்தொகை ரூ.15,100/-ஐ விட கூடுதலாக ரூ.100/- சேர்த்து, திரு.வி.எஸ்.தேவராஜ் என்பவர் ரூ.15,200/-க்கு உயர்ந்தபட்ச ஏலத்தொகை கோரியுள்ளார்.

வரிசை எண். 2 ல் கண்டுள்ள தினசரி சந்தை IUDM கடை எண். A.09 க்கு திரு.எம்.மணிகண்டன் என்பவர் கோரியுள்ள ஏலத்தொகை ரூ.15,100/-ஐ விட கூடுதலாக ரூ.100/- சேர்த்து, திரு.த.சதீஷ்குமார் என்பவர் ரூ.15,200/-க்கு உயர்ந்தபட்ச ஏலத்தொகை கோரியுள்ளார்.

வரிசை எண். 3 ல் கண்டுள்ள தினசரி சந்தை IUDM கடை எண். A.10 க்கு திரு.எம்.வடிவேல் என்பவர் கோரியுள்ள ஏலத்தொகை ரூ.15,100/-ஐ விட கூடுதலாக ரூ.100/- சேர்த்து, திரு.எஸ்.கார்த்திக் என்பவர் ரூ.15,200/-க்கு உயர்ந்தபட்ச ஏலத்தொகை கோரியுள்ளார்.

வரிசை எண். 4 ல் கண்டுள்ள தினசரி சந்தை IUDM கடை எண். A.13 க்கு திரு.என்.ரமேஷ்குமார் என்பவர் கோரியுள்ள ஏலத்தொகை ரூ.15,100/-ஐ விட கூடுதலாக ரூ.100/- சேர்த்து, திருமதி.ஆர்.விஜயலட்சுமி என்பவர் ரூ.15,200/-க்கு உயர்ந்தபட்ச ஏலத்தொகை கோரியுள்ளார்.

வரிசை எண். 5 ல் கண்டுள்ள தினசரி சந்தை IUDM கடை எண். A.16 க்கு திரு.ஜி.வி.அதியமான் என்பவர் கோரியுள்ள ஏலத்தொகை ரூ.15,100/-ஐ விட கூடுதலாக ரூ.100/- சேர்த்து, திரு.வெ.குமார ராஜா என்பவர் ரூ.15,200/-க்கு உயர்ந்தபட்ச ஏலத்தொகை கோரியுள்ளார்.

வரிசை எண். 6 ல் கண்டுள்ள தினசரி சந்தை IUDM கடை எண். A.18 க்கு திரு.வி.ஸ்ரீதர் என்பவர் கோரியுள்ள ஏலத்தொகை ரூ.15,100/-ஐ விட கூடுதலாக ரூ.100/- சேர்த்து, செல்வி.ராஜேஸ்வரி என்பவர் ரூ.15,200/-க்கு உயர்ந்தபட்ச ஏலத்தொகை கோரியுள்ளார்.

வரிசை எண். 7 ல் கண்டுள்ள தினசரி சந்தை IUDM கடை எண். A.22 க்கு திரு.வி.கவியரசன் என்பவர் கோரியுள்ள ஏலத்தொகை ரூ.15,100/-ஐ விட கூடுதலாக ரூ.100/- சேர்த்து, திரு.அ.சண்முகசுந்தரம் என்பவர் ரூ.15,200/-க்கு உயர்ந்தபட்ச ஏலத்தொகை கோரியுள்ளார்.

வரிசை எண். 8 ல் கண்டுள்ள தினசரி சந்தை IUDM கடை எண். A.23 க்கு திரு.வி.கவியரசன் என்பவர் கோரியுள்ள ஏலத்தொகை ரூ.15,100/-ஐ விட கூடுதலாக ரூ.100/- சேர்த்து, திரு.அ.சண்முகசுந்தரம் என்பவர் ரூ.15,200/-க்கு உயர்ந்தபட்ச ஏலத்தொகை கோரியுள்ளார்.

வருவாய் ஆய்வர் அவர்கள் தனது 13.10.2023 ஆம் தேதிய குறிப்பில், தினசரி சந்தை IUDM கடை எண்கள். A.07, A.09, A.10, A.13, A.16, A.18, A.22 மற்றும் A.23 ஆகிய எட்டு கடைகளுக்கு உயர்ந்தபட்ச ஏலத் தொகை கோரியுள்ள நபர்களுக்கு மன்றத்தின் அனுமதி பெற்று, கட்டுமான

பணிகள் முடிவடைந்தபின் ஒப்படைக்கும் நாள் முதல் மூன்று ஆண்டுகளுக்கு குத்தகை உரிமம் வழங்கலாம் எனத்தெரிவித்துள்ளார்.

எனவே வருவாய் ஆய்வர் அவர்கள் குறிப்பின்படி

1. தினசரி சந்தை IUDM கடை எண். A.07 க்கு உயர்ந்தபட்ச ஏலத்தொகை ரூ.15,200/– கோரியுள்ள திரு.வி.எஸ்.தேவராஜ் என்பவருக்கும்,
2. தினசரி சந்தை IUDM கடை எண். A.09 க்கு உயர்ந்தபட்ச ஏலத்தொகை ரூ.15,200/– கோரியுள்ள திரு.த.சதீஷ்குமார் என்பவருக்கும்,
3. தினசரி சந்தை IUDM கடை எண். A.10 க்கு உயர்ந்தபட்ச ஏலத்தொகை ரூ.15,200/– கோரியுள்ள திரு.எஸ்.கார்த்திக் என்பவருக்கும்,
4. தினசரி சந்தை IUDM கடை எண். A.13 க்கு உயர்ந்தபட்ச ஏலத்தொகை ரூ.15,200/– கோரியுள்ள திருமதி.ஆர்.விஜயலட்சுமி என்பவருக்கும்.
5. தினசரி சந்தை IUDM கடை எண். A.16 க்கு உயர்ந்தபட்ச ஏலத்தொகை ரூ.15,200/– கோரியுள்ள திரு.வெ.குமார ராஜா என்பவருக்கும்.
6. தினசரி சந்தை IUDM கடை எண். A.18 க்கு உயர்ந்தபட்ச ஏலத்தொகை ரூ.15,200/– கோரியுள்ள செல்வி.ராஜேஸ்வரி என்பவருக்கும்.
7. தினசரி சந்தை IUDM கடை எண். A.22 க்கு உயர்ந்தபட்ச ஏலத்தொகை ரூ.15,200/– கோரியுள்ள திரு.அ.சண்முகசுந்தரம் என்பவருக்கும்,
8. தினசரி சந்தை IUDM கடை எண். A.23 க்கு உயர்ந்தபட்ச ஏலத்தொகை ரூ.15,200/– கோரியுள்ள திரு.அ.சண்முகசுந்தரம் என்பவருக்கும்

புதியதாக கட்டப்பட்டு வரும் தினசரி வணிக வளாக கட்டுமான பணிகள் முடிவடைந்தபின், ஒப்படைக்கும் நாள் முதல் மூன்று ஆண்டுகளுக்கு குத்தகை உரிமம் வழங்கவும், ஏலம் போகாத மீதமுள்ள 16 கடைகளுக்கு மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 1272/2023/அ3)

**அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.**
**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.661**

18. இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் மேற்கொள்ளப்படும் தூய்மைப் பணிகளுக்கு தேவையான கிருமி நாசினிகள் கொள்முதல் செய்யும் பணிக்கு 05.10.2023 ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் பின்வருமாறு

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் (ரூ.)GST உட்பட | | |
|---|---|---|---|---|
| 1 | ஸ்ரீ வெங்கடேஸ்வரா அன் கோ., 79, ABC வைத்தியர் ஆறுமுக உடையார் வீதி, தெலுங்குபாளையம், கோயமுத்தூர் – 641 039 | நீர்த்த சுண்ணாம்பு | டன் ஒன்றுக்கு | ரூ. 9000/– |
| | | பிளீச்சிங் பவுடர் | டன் ஒன்றுக்கு | ரூ. 34000/– |
| | | கருப்பு பினாயில் | லிட்டர் ஒன்றுக்கு | ரூ. 65/– |
| | | ஆசிட் கழிப்பறைகளுக்கு பயன்படுத்த | லிட்டர் ஒன்றுக்கு | ரூ. 50/– |
| 2 | ஸ்ரீஅங்காளம்மன் எண்டர் பிரைசஸ், டெக்ஸ்டூல் காலனி, | நீர்த்த சுண்ணாம்பு | டன் ஒன்றுக்கு | ரூ. 9150/– |

| | | | | |
|---|---|---|---|---|
| | ராமச்சந்திரன் நகர், கோயமுத்தூர் 641039 | பிளீச்சிங் பவுடர் | டன் ஒன்றுக்கு | ரூ. 34270/- |
| | | கருப்பு பினாயில் | லிட்டர் ஒன்றுக்கு | ரூ. 69/- |
| | | ஆசிட் கழிப்பறைகளுக்கு பயன்படுத்த | லிட்டர் ஒன்றுக்கு | ரூ. 53/- |

மேற்குறிப்பிட்ட விபரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண். 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனமான M/s. ஸ்ரீ வெங்கடேஸ்வரா அன் கோ., 79, ABC வைத்தியர் ஆறுமுக உடையார் வீதி, தெலுங்குபாளையம், கோயமுத்தூர் – 641 039 அவர்களின் ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் மற்றொன்றைவிட குறைவாக உள்ளதால் அந்நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதத்தினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண். 1709/2023/எச் 1)

**அலுவலக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.
**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.662**

19. இந்நகராட்சியில் தினமும் சேகரமாகும் ஈரக்கழிவுகள் கரட்டூரில் உள்ள இரண்டு நுண் உரமாக்கல் மையங்களிலும் ராமர் எக்ஸ்டென்சனில் உள்ள ஒரு நுண் உரமாக்கல் மையத்திலும் உரமாக்கப்பட்டு வருகிறது. மக்காத கழிவுகள் கரட்டூரில் உள்ள வள மீட்பு மையம் (RRC) யிலும் கையாளப்பட்டு வருகிறது.

எனவே இதனை சரிசெய்யும் விதமாக இந்நகராட்சியின் 3 MCC மையங்கள், ஒரு RRC மையம், ஒரு BIO- GAS PLANT மற்றும் 30 CT, PT, போன்றவற்றில் தினமும் Lemon Gross Oil தெளித்து கிருமி நாசினம் செய்ய வேண்டியுள்ளது.

இப்பணிக்கு 50 லிட்டர் Lemon Gross Oil கொள்முதல் செய்து கொள்ளவும், அதற்காகும் செலவினம் ரூ.1,60,000/-ற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 2479/2023/எச் 1)

**அலுவலகக் குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.663**

20. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.20789/2021/UPA நாள்.08.09.2023 இல் சாலையோர நடைபாதை வியாபாரிகளின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கவும், முறைப்படுத்தவும், இதற்கான இந்திய அரசு சட்டம் 2014 அத்தியாயம்-II பிரிவு 3 இன் படி 5 வருடத்திற்கு ஒருமுறை கணக்கெடுப்பு பணி மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும், இப்பணியினை 30.10.2023 க்குள் முடிக்கப்பட வேண்டும் எனவும், கணக்கெடுப்பு பணி முடிக்கப்பட்டவுடன், அவர்களுக்கு அடையாள அட்டை மற்றும் வியாபாரச்சான்று 15.11.2023 க்குள் வழங்கப்பட வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், சாலையோர நடைபாதை வியாபாரிகளின் வியாபாரக்குழுவை 31.12.2023 க்குள் தேர்தல் நடத்தப்பட்டு தேர்வு செய்து அமைக்கப்பட வேண்டும் எனவும் இக்குழு அமைப்பதற்கான கடைசி நாள் 20.01.2024 ஆகும் எனவும், மேலும் 28.02.2024க்குள் வியாபார மண்டலம் மற்றும் வியாபாரமற்ற மண்டலம் அடையாளம் கண்டறிந்து பட்டியல் தயார் செய்யப்பட வேண்டும் எனவும், 31.03.2024 க்குள் சாலையோர வியாபார திட்ட அறிக்கை தயார் செய்யப்பட வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேற்படி வியாபாரக்குழு அமைப்பதற்கு முன்பாக கீழ்காணும் அலுவலர்களை கொண்டு விற்பனை குழு அமைக்கப்பட வேண்டும்.

| வ. எண் | விற்பனை குழு தலைவர் மற்றும் உறுப்பினர்கள் விபரம் | பதவியின் பெயர் |
|---|---|---|
| 1. | தலைவர், நகர விற்பனைக்குழு | ஆணையாளர், கோபிசெட்டிபாளையம் நகராட்சி |
| 2. | உறுப்பினர், நகர விற்பனைக்குழு | நகராட்சி பொறியாளர், கோபிசெட்டிபாளையம் நகராட்சி |
| 3. | கன்வீனர், நகர விற்பனைக்குழு | சமுதாய அமைப்பாளர், கோபிசெட்டிபாளையம் நகராட்சி |
| 4. | உறுப்பினர், நகர விற்பனைக்குழு | நகரமைப்பு ஆய்வாளர், கோபிசெட்டிபாளையம் நகராட்சி |
| 5. | உறுப்பினர், நகர விற்பனைக்குழு | காவல் துறை ஆய்வாளர், கோபிசெட்டிபாளையம் |
| 6. | உறுப்பினர், நகர விற்பனைக்குழு | சாலையோர வியாபாரிகள் சங்க தலைவர் |
| 7. | உறுப்பினர், நகர விற்பனைக்குழு | இருப்பிட சங்க பிரதிநிதி |
| 8. | உறுப்பினர், நகர விற்பனைக்குழு | தன்னார்வ தொண்டு நிறுவன பிரதிநிதி மற்றும் நகர தொழில்குழு பிரதிநிதி |
| 9. | உறுப்பினர், நகர விற்பனைக்குழு | வர்த்தக வணிக நிறுவன பிரதிநிதி |
| 10. | உறுப்பினர், நகர விற்பனைக்குழு | மாவட்ட முன்னோடி வங்கி பிரதிநிதி |
| 11. | உறுப்பினர், நகர விற்பனைக்குழு | நகர முக்கியஸ்த பெண் பிரதிநிதி ஒருவர் |

மேற்காணும் விபரப்படி நகர விற்பனைக்குழு அமைக்கப்பட வேண்டும். இதன் பின்னர் கீழ்காணும் விபரப்படியான வியாபாரக்குழு அமைப்பதற்கு தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் சாலையோர விற்பனையை ஒழுங்குபடுத்துதல்) திட்டம் 2015 விதி 13(1) இன் கீழ் தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

5 உறுப்பினர்கள் கொண்ட வியாபாரக்குழு

| | | |
|---|---|---|
| 1. | தாழ்த்தப்பட்டோர் வகுப்பை சார்ந்தவர் | 1 உறுப்பினர் |
| 2. | பொது வகுப்பினர் | 1 உறுப்பினர் |
| 3. | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் | 1 உறுப்பினர் |
| 4. | சிறுபான்மையினர் | 1 உறுப்பினர் |
| 5. | மகளிர் வகுப்பினர் | 1 உறுப்பினர் |

மேற்காணும் விபரங்களை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண்.2188/2023/எப்1)

**அலுவலக குறிப்பு:–** மன்றம் பதிவு செய்யலாம்.

**அலுவலக குறிப்பு பதிவு செய்யப்பட்டது. மன்றத்தீர்மான எண்.664**

21. கோபிசெட்டிபாளையம் நகராட்சி பழைய ஆஸ்பத்திரி வீதி கடை எண்.23 வரி விதிப்பு எண்.057/80 ன் குத்தகைதாரர் திரு.எம்.பி.கருணாகரன் என்பவர் தனது வைப்பு தொகையை திரும்ப வழங்க கோரி மனு செய்துள்ளார். மேற்படி கடை பழுதடைந்து விட்ட காரணத்தால் 31.03.2022 முதல் நகராட்சி வசம் எடுக்கப்பட்டு கடையின் குத்தகை உரிமம் ரத்து செய்யப்பட்டுவிட்டது எனவும் மேற்படி குத்தகைதாரரின் வைப்பு தொகை ரூ.36099/–ஐ திரும்ப வழங்கலாம் என வருவாய் ஆய்வர் தனது குறிப்பில் தெரிவித்துள்ளார். எனவே, திரு.எம்.பி.கருணாகரன் என்பவரது வைப்பு தொகையை திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.2033/2023/பி3)

**அலுவலக குறிப்பு:–** மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.665**

22. கோபிசெட்டிபாளையம் நகராட்சி பகுதியில் கொசுஒழிப்பு பணிகளுக்கு உபயோகப்படுத்தப்படும் வாகனத்தில் பொருத்தி புகை மருந்து தெளிக்கும் புகைத் தெளிப்பான் மிஷினில் (Vehicle Mounted Fogging Machine) ஏற்பட்டிருந்த பழுதுகள் செப்பனிட்டு வழங்க 18.10.2023 ஆம் தேதி ஒப்பந்தபுள்ளி பெறப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகளின் விபரம் பின்வருமாறு:

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தபுள்ளி விலைவிகிதம் |
|---|---|---|
| 1. | Krishna Fogker<br>69, Sathy Road,<br>AGR Complex,<br>Erode. | ரூ.24,950 /– |
| 2. | A. Venkatesan,<br>Fogging Service Point,<br>432, Main Road,<br>Thukkapet, Chengam | ரூ.24,375 /– |

மேற்கண்ட விபரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்த புள்ளிகளில் வரிசை எண் 2 ல் கண்டுள்ள M/s. A. Venkatesan, Fogging Service Point, 432, Main Road, Thukkapet, Chengam அவர்களின் ஒப்பந்தபுள்ளி விலைவிகிதம் மற்றொன்றைவிட குறைவாக உள்ளதால் அதனை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண். 2272/2023/எச்1)

**அலுவலகக்குறிப்பு:** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.666**

23. இந்நகராட்சியின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை பணிகளுக்கு உபயோகப்படுத்திட (Indoor Fogging Machine Cylinder Gas Can Type – Mini Gas Fogger) புதியதாக கொள்முதல் செய்யவும் அதற்கான " Cylinder Gas " பாட்டில்கள் விநியோகம் செய்யும் பணிக்கும் 18.10.2023 ஆம் தேதி ஒப்பந்தபுள்ளிகள் பெறப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தபுள்ளி விலைவிகிதம் |
|---|---|---|
| 1. | திரு. அண்ணாமலையார் ஏஜென்சீஸ்<br>திருப்பத்தூர் மெயின்ரோடு,<br>ஊ. ஆண்டியூர்,<br>கிருஷ்ணகிரி மாவட்டம். | Indoor Fogging Machine –1 எண்ணிக்கைக்கு<br>ரூ. 9725 +GST 12% Extra<br>Cylinder Gas பாட்டில் 1ற்கு<br>ரூ. 182+ GST 18% Extra<br>(GST உட்பட) |
| 2. | ஸ்ரீ விநாயகா என்டர் பிரைசஸ்<br>432, பெங்களூர் மெயின்ரோடு,<br>துக்கா பேட்டை,<br>செங்கம். | Indoor Fogging Machine –1 எண்ணிக்கைக்கு<br>ரூ. 9675 +GST 12% Extra<br>Cylinder Gas பாட்டில் 1ற்கு)<br>ரூ. 175 + GST 18% Extra<br>(GST உட்பட) |

மேற்கண்ட விபரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்த புள்ளிகளில் வரிசை எண் 2 ல் கண்டுள்ள M/s. ஸ்ரீ விநாயகா என்டர் பிரைசஸ் 432, பெங்களூர் மெயின்ரோடு, துக்கா பேட்டை, செங்கம் அவர்களின் ஒப்பந்தபுள்ளி விலைவிகிதம் மற்றொன்றைவிட குறைவாக உள்ளதால் அதனை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண். 2289 /2023/எச்1)

**அலுவலகக்குறிப்பு:** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.667**

24. இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு பணிகளுக்கு தேவையான விழிப்புணர்வு பிளக்ஸ் போர்டுகள் கடந்த 14.09.2023 முதல் 14.10.2023 வரை பல்வேறு

விழிப்புணர்வு பணிகளுக்கு M/s. STROKE DIGITAL, 5, முத்துஷா வீதி, கோபிசெட்டிபாளையம் அவர்களிடம் கீழ்காணும் விபரப்படி விழிப்புணர்வு விளம்பர பலகைகள் தயார் செய்து பொது இடங்களில் அமைத்தும், விழிப்புணர்வு முகாம் நடைபெறும் போது விளம்பர பலகைகள், பிளக்ஸ் போர்டுகள் பொருத்தியும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதன் விபரம் பின்வருமாறு:–

| வ. எண் | பிளக்ஸ் தயார் செய்த தேதி | விபரம் | அளவு | எண்ணிக் கை | வழங்கப்பட வேண்டிய தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | 14.09.2023 | INDIAN SWACHHATA LEAGUE SEASON 2 குறித்த பிளக்ஸ் | 5' X 4' | 3 | 1200 /– |
| 2 | 14.09.2023 | INDIAN SWACHHATA LEAGUE SEASON 2 குறித்த பிளக்ஸ் | 3' X 3 ' | 2 | 500 /– |
| 3 | 16.09.2023 | INDIAN SWACHHATA LEAGUE SEASON 2 குறித்த பிளக்ஸ் | 6' X 4' | 2 | 920 /– |
| 4 | 19.09.2023 | டெங்கு விழிப்புணர்வு பிளக்ஸ் | 8' X 5' | 2 | 1160 /– |
| 5 | 19.09.2023 | டெங்கு விழிப்புணர்வு பிளக்ஸ் | 6' X 4' | 3 | 1380 /– |
| 6 | 28.09.2023 | RABIES FREE INDIA குறித்த பிளக்ஸ் | 6' X 4' | 2 | 920 /– |
| 7 | 30.09.2023 | தூய்மையே சேவை என்பது குறித்து பிளக்ஸ் | 6' X 3' | 3 | 1110 /– |
| 8 | 07.10.2023 | தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 விழிப்புணர்வு வாரம் என்பது குறித்த பிளக்ஸ் | 6' X 4' | 2 | 1000 /– |
| 9 | 14.10.2023 | தூய்மை பணியாளர்களின் மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் கணக்கெடுப்பு குறித்த பிளக்ஸ் | 6' X 4' | 2 | 920 /– |
| 10 | 13.09.2023 | மகளிர் உரிமைத் தொகை பெறுவதற்கு தகுதிகள் குறித்த பிளக்ஸ் | 10' X 10' | 2 | 8000 /– |
| | | மொத்தம் | | | 17,110/– |

மேற்காணும் விபரப்படி இப்பணிகள் அவ்வப்போது அவசர பணியாக மேற்கொள்ளப்பட்டுள்ளதால் அப்பணிகளுக்கு தேவையான FLEX Board கள் உள்ளூரில் தயார் செய்து வழங்கிய M/s. Stroke Digital, கோபிசெட்டிபாளையம் அவர்களுக்கு மொத்தம் ரூ. 17,110 /– வழங்க வேண்டி உள்ளது. எனவே இப்பணிகளை அவ்வபோது மேற்கொண்டதை மன்றம் அங்கீகரித்து அந்நிறுவனத்திற்கு தொகையினை வழங்கிட மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது. (ந.க.எண்.648/2023/எச்1)

**அலுவலகக்குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.
**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.668**

25. இந்நகராட்சியின் மூலம் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்படும் குடிநீரில் போதுமான குளோரின் உள்ளதா என தினமும் சோதனை செய்ய புதியதாக குளோரோஸ்கோப் கிட் வாங்குவதற்கு 25.10.2023 அன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விபரம் பின்வருமாறு.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | 1 Test Kit –ற்கான விலைவிகிதம் |
|---|---|---|
| 1. | ஸ்ரீ மதர் சேப்டி<br>448, லட்சுமி நகர்,<br>பவானி மெயின் ரோடு, | ரூ. 965/– + 18% GST |

| | | |
|---|---|---|
| | ஈரோடு. | |
| 2. | ஸ்ரீ சோமு பயர் சேப்டி<br>298, சத்தி ரோடு,<br>ஈரோடு. | ரூ. 945/- +18% GST |
| 3. | ஸ்ரீ அரோ ராம் பயர் மற்றும் சேப்டி<br>எக்யூப்மெண்ட்ஸ்,<br>9/2, அகில் மேடு,<br>6 வது வீதி,<br>ஈரோடு. | ரூ. 920/- +18% GST |

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண் 3 ல் குறிப்பிட்டுள்ள M/s. ஸ்ரீ அரோ ராம் பயர் மற்றும் சேப்டி எக்யூப்மெண்ட்ஸ், 9/2, அகில் மேடு, 6 வது வீதி, ஈரோடு அவர்களின் விலைப்புள்ளி விலைவிகிதம் மற்ற இரண்டையும் விட குறைவாக உள்ளதால் அவர்களது விலை விகிதத்தினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண். 2256/2023/எச்1)

**அலுவலகக்குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.
**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.669**

26. இந்நகராட்சியில் **15 வது நிதிக்குழு மானியம் 2023-2024 ல்** கீழ்கண்டுள்ள பணியினை செய்வதற்கு 12.10.2023 தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் விபரம் | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| **1.** | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு 40HP அளவுள்ள Pulveriser விநியோகம் செய்தல் | 600000 | **M/s.சஞ்சய் எலக்ட்ரிக்கல்ஸ் ஒப்பந்ததாரர்** | 0.17 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | திரு .V.தங்கராஜ் ஒப்பந்ததாரர் | 1.69 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

(ந.க.எண். 1383 /2023 /இ1)

**அலுவலகக்குறிப்பு :-**

1. .மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி பணிகளில் வ.எண்.1 –க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **M/s.சஞ்சய் எலக்ட்ரிக்கல்ஸ்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
3. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு 1.அனுமதிக்கப்பட்டது. 2 மற்றும் 3 ஏற்றுக்கொள்ளப்பட்டது.**
**மன்றத்தீர்மான எண்.670**

27. இந்நகராட்சியில் **15 வது நிதிக்குழு மானியம் 2023-24** ல் கீழ்கண்ட பணிகளை செய்வதற்கு 10.10.2023 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் விபரம் | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட வாரச்சந்தை பகுதியில் 3MT அளவுள்ள வள மீட்பு மையம் (MRF) கட்டுதல் | 26,00,000 | **திரு .V.தங்கராஜ் ஒப்பந்ததாரர்** | 0.07 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | M/s.**சஞ்சய் எலக்ட்ரிக்கல்ஸ்** ஒப்பந்ததாரர் | 2.36 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| 2. | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட ராமர் எக்ஸ்டன்சன் 2 MT அளவுள்ள வள மீட்பு மையம் (MRF) கட்டுதல் | 17,00,000 | **திரு .V.தங்கராஜ் ஒப்பந்ததாரர்** | 0.07 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | M/s.**சஞ்சய் எலக்ட்ரிக்கல்ஸ்** ஒப்பந்ததாரர் | 1.78 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| 3. | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட நுண் உர செயலாக்க மையத்தில் பராமரிப்பு பணிகள் செய்தல் | 14,00,000 | **திரு .V.தங்கராஜ் ஒப்பந்ததாரர்** | 0.07 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | M/s.**சஞ்சய் எலக்ட்ரிக்கல்ஸ்** ஒப்பந்ததாரர் | 2.68 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

**(ந.க.எண். 1216/2023/ இ1 )**

<u>அலுவலகக்குறிப்பு :–</u>

1. .மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி பணிகளில் வ.எண்.1 -க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **திரு .V.தங்கராஜ்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
3. மேற்படி பணிகளில் வ.எண்.2 -க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **திரு .V.தங்கராஜ்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
4. மேற்படி பணிகளில் வ.எண்.3 -க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **திரு .V.தங்கராஜ்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
5. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு 1.அனுமதிக்கப்பட்டது. 2 ஏற்றுக்கொள்ளப்பட்டது, 3,4 மற்றும் 5 ஏற்றுக்கொள்ளப்பட்டது. மன்றத்தீர்மான எண்.671**

28. இந்நகராட்சியில் 15வது நிதிக்குழு மானியம் 2023–2024 திட்டத்தின் கீழ் கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு 6000 லிட்டர் கொள்ளளவு கொண்ட வாட்டர் லாரி விநியோகம் செய்தல் பணியினை ரூ.28,00,000 மதிப்பீட்டில் செய்வதற்கு 10.10.2023 ஆம் தேதியில்

ஒப்பந்தப்புள்ளிகள் கோராப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கியுள்ளார்கள் .

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | தொழில்நுட்ப தகுதி விவரம் |
|---|---|---|
| 1. | M/s.லஷ்மி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் சேலம் மெயின் ரோடு , மேட்டூர் | தொழில்நுட்ப தகுதி பெற்றுள்ளார் |
| 2. | M/s .மணி மோட்டார்ஸ் & டிரேடர்ஸ் தெர்மர் நான்கு சாலை , மேட்டூர் . | தொழில்நுட்ப தகுதி பெற்றுள்ளார் |

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்ததாரர்களும் தொழில்நுட்ப தகுதி பெற்றுள்ளதால் இரண்டு ஒப்பந்ததாரர்களுடைய ஒப்பந்த விலை பட்டியலில் (Price Bid) திறக்க 19.10.2023 ல் அறிவிப்பு வழங்கப்பட்டு விலைப்புள்ளி திறக்கப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ளது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1. | M/s.லஷ்மி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் சேலம் மெயின் ரோடு , மேட்டூர் | மதிப்பீட்டு விலை விகிதத்திலேயே |
| 2. | M/s .மணி மோட்டார்ஸ் & டிரேடர்ஸ் தெர்மர் நான்கு சாலை , மேட்டூர் . | 17.86 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் மதிப்பீட்டு விலை விகிதத்திலே வழங்கியுள்ள M/s.லஷ்மி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது. ( ந.க.எண். 1216/202**3/** இ1)

<u>அலுவலகக்குறிப்பு :–</u>

அ.). மன்றம் அனுமதிக்கலாம்
ஆ). மேற்படி பணிகளில் வ.எண்.1 –க்கு மதிப்பீட்டு விலை விகிதத்திலேயே அளித்துள்ள **M/s.லஷ்மி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்
இ). பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு அ) அனுமதிக்கப்பட்டது. ஆ) மற்றும் இ) ஏற்றுக்கொள்ளப்பட்டது.**
**மன்றத்தீர்மான எண்.672**

29. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள மனைப்பிரிவுகளில் (Layout) பகுதிகளில் உள்ள தெரு விளக்குகள் எரியாமல் உள்ளது. அதை எரியவைக்க வேண்டியுள்ளதால் ஏற்கனவே தெரு விளக்குகள் பராமரிக்க Schnell Energy Equipment (P) Ltd அவர்களுக்கு மனைபிரிவுகளில் உள்ள 48 எண்ணிக்கை தெரு விளக்குகளை பராமரிக்கவும் அதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
மனைப்பிரவுகளில் உள்ள தெரு விளக்குகள் விவரம் குழாய் விளக்கு

<u>வார்டு எண்.3</u>

1. வைரவா நகர் – 6 Nos
2. அபி அவென்யூ–3 Nos
3. பரணி நகர் –6 Nos

**<u>வார்டு எண்.4</u>**

1. மணிஷ் கார்டன் –4 Nos

**<u>வார்டு எண்.1</u>**

1. குபேர லட்சுமி –7 Nos

**<u>வார்டு எண்.12</u>**

1. கவிதா காலணி –3 Nos

**<u>வார்டு எண்.24</u>**

1. சுவாமி நகர் –4 Nos
2. குமரன் நகர் –5 Nos

**<u>வார்டு எண்.29</u>**

1. சீனிவாச நகர் –10 Nos

மொத்த தெரு விளக்குள் – 48 Nos

**அலுவலகக்குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம் .
2. மேற்படி பணியினை Schnell Energy Equipment (P) Ltd நிறுவனத்திடம் ஒப்படைக்கவும் மற்றும் பராமரிப்பு பணியின் செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு 1மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.673**

(ஒப்பம்)– என்.ஆர்.நாகராஜ்
தலைவர்
கோபிசெட்டிபாளையம் நகராட்சி

/ உண்மை நகல்/

ஆணையாளர்
கோபிசெட்டிபாளையம் நகராட்சி